செய்தி வெளியீடு **நாள்: 29.03.2025**

கிண்டி, அருளையியாம்மண்பேட்டையில் வருவாய் துறைக்கு சொந்தமான 7 ஏக்கர் இடத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் புதிய பல்நோக்கு மையம் அமைப்பதற்கான இடத்தினை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.எ.வ.வேலு அவர்கள், திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் நேரில் களஆய்வு.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (29.03.2025) மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் **திரு.எ.வ.வேலு அவர்கள்**, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் **திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள்**, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** ஆகியோர் சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிண்டி, நாகிரெட்டி தோட்டம், அருளையியாம்மண்பேட்டையில் வருவாய் துறைக்கு சொந்தமான 7 ஏக்கர் இடத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் புதிய பல்நோக்கு மையம் அமைப்பதற்கான இடத்தினை களஆய்வு மேற்கொண்டனர்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

தென் சென்னை பகுதியில் உள்ள கிண்டி நாகிரெட்டி தோட்டம் என்று பெயர், இந்த பகுதிக்கு இது முழுக்க முழுக்க வருவாய் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஒரு இடம் ஏறத்தாழ ஏழு ஏக்கர் இடம் மூன்று மாதம் காலத்திற்கு முன்பாக நானும் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் இந்த இடத்தை நாங்கள் ஆய்வு செய்தோம் இது தென்னகப் பகுதியில் ஒரு மையப்பகுதியாக இருக்கின்ற ஒரு இடம் அரசு புறம்போக்கு இந்த இடத்தை எப்படியாவது பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்ற அதன் அடிப்படையில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கோரிக்கையை வைத்தார்கள்.

பெரும்பான்மையான திருமண கூடங்கள், சமுதாய கூடங்கள், சமூக நலன் சார்ந்த பல்வேறு வற்றை பார்க்கின்ற பொழுது நமக்கு அண்ணா சாலைக்கு அந்தப் பகுதியில் தான் அனைத்துமே உள்ளது. இந்த பகுதியில் எவ்விதமான பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் சமூக நலம் சார்ந்த நிகழ்ச்சி நடத்துவதற்கான சமுதாயக்கூடம் ஏதும் இல்லை. இந்த வகையில் தான் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம்** சொன்ன உடனேயே **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** நம்முடைய மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை சந்தித்து சிஎம்டிஏ-வில் நிதிகள் இருந்தால் அதில் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** ஆணையிட்டார்கள். அந்த வகையில் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய** ஆணையை ஏற்று மீண்டும் இந்த இடத்தை ஆய்வு செய்து

Verified RealEstate ™

அரசாங்கத்தினுடைய விதிகளுக்குட்பட்டு இந்த கட்டடம் கட்டப்பட முடியுமா என்பது ஆய்வு செய்வதற்காக தான் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட செயலாளர் அவர்களும் இங்கே வந்துள்ளார்கள்.

இந்த இடம் நம் ஆரம்பத்திலேயே சொன்னது போல் ஏழு ஏக்கர் இடம் உள்ளது. இதில் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் காரணத்தினால் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம்** வைத்த கோரிக்கை என்னவென்றால் குறைந்தது 2000 **நபர்களாவது இங்கு அமர்ந்து நிகழ்ச்சிகளை நடத்துபவதற்கான இடவசதியும்,** அதே போன்று **திருமணங்கள் நடத்திக் கொள்வதற்கும் இங்கு வருபவர்களுக்கு வாகன நிறுத்தும் இடங்கள்** பெரும்பான்மையாக நாம் பார்க்கின்ற போது, நிறைய இடங்களில் வாகனம் நிறுத்தும் இடவசதி இல்லாமல் தான் இருக்கும். கட்டடங்கள், திருமணம் கூடங்கள் என அனைத்து இருந்தால் கூட கார் பார்க்கிங் என்பது மிகக் குறைவாக தான் இருக்கும். ஆனால் இந்த 7 ஏக்கரில் நாம் தேர்வு செய்கின்ற பொழுது வாகன நிறுத்தும் இடம் போதுமான அளவிற்கு ஏறத்தாழ 2000 வாகனங்களுக்கு மேல் நிறுத்துவதற்கும் இடம் வசதி உள்ளது.

இதற்குப் பின்னால் திட்ட மதிப்பீடு அனைத்தையும் தயார் செய்து, நம்முடைய மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் இசைவின் பேரில் இந்த கட்டடத்தை சிறப்பாக கட்டி அவர்களுக்கு கொடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆய்வுக்கு பின்னால் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை** சந்தித்து மூன்று பேரும் சேர்ந்து பாசிட்டிவாக அதாவது முன்னோக்கி செல்கின்ற அளவிற்கு இந்த கட்டடம் அமைவதற்கு வேண்டிய முயற்சிகள் நாங்கள் எடுப்போம்.

திருமண கூடங்கள் பொதுவாக நாம் சமுதாய கூடங்கள் என்று சொன்னால் கூட பெரும்பான்மையாக பயன்படுத்துவது என்று திருமணத்திற்காக தான் அதிகமாக பயன்படுத்துகிறோம். எனக்குத் தெரிந்து வருடத்திற்கு ஏறத்தாழ 65 திருமணங்கள் நடைபெறுகின்றது. ஆன்மீக திருமணங்கள் செய்வதாக திருமணம் செய்வதற்கு கால நேரமே கிடையாது தலைவர்கள் தேடி தரும் நாட்களிலும் திருமணங்கள் நடைபெறும், பொதுவாக என்னவென்றால் இந்த தென்பகுதிகள் சைதாப்பேட்டை ஒரு புகழ்பெற்ற தொகுதி, **எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே** நின்று வெற்றி பெற்ற தொகுதி. இந்த பகுதியில் இருக்கின்ற மக்கள் அனைவருமே தாம்பரத்திலிருந்து ஆரம்பித்து இந்த பகுதியில் உள்ளவர்கள் அனைவரும் திருமணம் செய்து கொள்வதற்கு அல்லது பல்வேறு பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு இந்த இடத்திற்கு வருவது ஒரு வாய்ப்பாக அமையும் இது கட்டி முடித்தவுடன் சிறப்பாக இடமாகவும் அமையும்.

இதற்கான உரிய நிதிகளை நம்முடைய சிஎம்டிஏ-வில் இருந்து மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கொடுக்கவிருக்கின்றார். இதற்கு பின்னால்தான் பொதுப்பணி துறையின் சார்பாக பொறியாளர்களை அனுப்பி திட்ட மதிப்பு அனைத்தையும் தயார் செய்து எவ்வளவு நபர்கள் அமரலாம், உட்கட்டமைப்பு அனைத்தையும் எவ்வாறு அமைக்கலாம், சுமார் 2000 நபர்கள் அமர்வதற்கு ஏதுவாக இந்த திருமணக்கூட்டம் அமைவதற்கு வாய்ப்புள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இசைவு தந்தால் அவர்களுடைய துறையில் உள்ளது அவர்களுடைய துறை மானியத்தில் தான் அதைப்பற்றி அவர்கள் அறிவிப்பார். இந்த பகுதியில் இருந்து நான்கு முனைகளுக்கும் செல்லலாம், நான்கு பகுதிகளுக்கு போகின்ற அளவிற்கு ஏற்கனவே சாலைகள் அமைந்திருக்கின்றது. அந்த கட்டிடம் கட்டும் பொழுது சாலைகள் சீர் இல்லாமல் இருந்தால் மாநகராட்சி சாலைகள் அல்லது நெடுஞ்சாலை சாலையாக இருந்தாலும் சரி, இவ்வளவு பெரிய கட்டிடத்தை கட்டியவுடன் சிறப்பான சாலையும் அமைத்து தரப்படும். இந்த கட்டடம் கட்டும் பொழுது அக்கம் பக்கம் இருக்கும் குடியிருப்புகளுக்கு, இந்த திட்டம் சௌகரியத்திற்காகவே தவிர ஆசாவுக்கரியத்திற்காக அல்ல. **இவ்வாறு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் டாக்டர் சு.பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.கிருஷ்ணமூர்த்தி, திரு.துரைராஜ், தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.முத்தமிழ் (பொதுப்பணித்துறை), திரு.ராஜமகேஷ்குமார் (சிஎம்டிஏ) மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate™